# மிகக் கடுமையான எதிர்ப்பைப் புலிகள் ஆனையிறவு போரில் காண்பிக்கின்றனர்

பக்கங்கள் நானகு | விலை ரூபா- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 244 பிரசோறபதி ஆடி 14 (30 - 07 - 1991) செவ்வாய்

### பி.பி. ஸி விமர்சனம்

1980களில் போராட்டத்தை ஆரம்பித்த விடுதலைப் புலிகள் இயக்கம் - இம்முறை - ஆனையிறவுப்போரி லேயே தமது மிகக்கடுமையான எதிர்ப்பைக் காட்டு கின்றனர் என பி. பி. ஸி. நேற்றுக்குறிப்பிட்டது. அவர் கள் தமது தீரமான எதிர்ப்பை இம்முறை அரச படை களுக்கு எதிராக ஆரம்பித்துள்ளனர். இத்தகைய தாக் குதல்களினால் ஆனையிறவு நோக்கி முன்னேறும் படையணிகளே திணறுவதாகக் குறிப்பிடும் பி.பி.ஸி. இப்படையணிகள் ஒரு சில வேளை முகாமை எட்டுவ தாயினும் அணிகள் பலத்த சேதமடைந்த நிலை யிலேயே இருக்கும் எனக்குறிப்பிட்டது. இப்படையணி கள் முகாமையடையும் போது முகாமின் நிலை எப்படி இருக்கும் என்றோ, முகாமின் எந்தப்பகுதிகள் எஞ்சி யிருக்கும் என்றோ, அங்கு தொடர்ந்தும் இராணு வத்தை வைத்திருக்க முடியுமேன்றோ இப்போது கூறி விட முடியாது எனவும் பி.பி. ஸி மேலும் தெரிவித்தது.

# புல்லாவெளியில் மீண்டும் மோதல்

# 2பவள் தகர்ப்பு; பல படையினர் பலி

## விமானப்படை அகோர குண்டு வீச்சு

**நேற்று மாலை மீண்டும் புல்லாவெளிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் வெடித்தன.**

நேற்று நண்பகல் 12. 30 மணியளவில் விமானங்கள் இப்பகுதியில் அகோரமாக குண்டு வீச்சை ஆரம்பித்தன. சுமார் ஒரு மணிநேரமாக விமானங்கள் மாறி மாறிக் குண்டுகளை புல்லா வெளிப் பகுதியெங்கும் வீசித்தள்ளின.

1. 30 மணியளவில் படை யினர் ஆனையிறவை நோக்கி முன்னேற முயன்ற போது, புலிகள் படையினர் மீது மீண்டும் கடுமையான முறை யில் தாக்குதலை ஆரம்பித் தனர்.

புலிகள் தாக்குதல் வேகம் அதிகரிக்கவே படையினர் தமது முயற்சியைக் கைவிட் டனர்.

மோதல்களின் போது புலி கள் நடாத்திய ரொக்கட் தாக்குதலில் 2 பவள் கவச வாகனங்கள் முற்றாகத் தகர்க் கப்பட்டன.

இச்சம்பவத்தில் படையினர் தரப்பிலும் பலத்த சேத மேற்பட்டுள்ளதாக யுத்த முனையில் இருந்து பிந்திக் கிடைத்த செய்திகள் தெரி வித்தன.

## புலிகளின் ஆனையிறவுப் போர்

### 'ஒப்பரேஷன் ஆ.க.வெ' என அறிவிப்பு

ஆனையிறவுப் பகுதியில் தற்போது நடைபெறும் யுத்தத்திற்கு விடுதலைப்புலிகள் ''ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கை'' (ஆ. க. வெ ஒப்பரேஷன்) எனப் பெயரிட்டுள்ளனர். விமானப்படையின் கடும் எதிர்ப்பையும், கடல்வழியால் இறக்கப் பட்ட படையணிகளை எதிர்த்தும் வெறும் வெளியான புவியியல் அமைப்புடைய நிலப்பரப்பில் நடைபெறும் மோதலையும் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத் திற்கு எதிராகப் பிரயோகிக்கும் எதிர்ப்புகளையும் கொண்டே மேற்படி ஆனையிறவு யுத்தத்திற்கு ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கை எனப் பெயரிடப்பட்டதாக விடுதலைப்புலி வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனையிறவு மோதலை ஸ்ரீலங்காப் படைகள் ஒப்பரேஷன் பலவேகய(பலமானவேகம்)எனப் பெயரிட்டுள்ளமை தெரிந்ததே

## நடைபெற்ற மோதல்களில் ஆனையிறவு யுத்தம் வேறுபாடு

ஆனையிறவு யுத்தம் இது வரை நடைபெற்ற மோதல் களிலும்விட பெரும் வேறு பாடுடையதாகவே காணப் படுவதாக யுத்தமுனைக்குச் சென்று வந்த ஒருவர் முர சொலிக்குத் தெரிவித்தார்.

இப்போரில் ஸ்ரீலங்காப் படைகள் தமது முழுப்பலத் தையும் பிரயோகித்து ஆனை யிறவில் புலிகள் முற்று கையை உடைத்தெறியப் பார்க்கிறது.

தற்போது மோதல் நடை பெறும் இடங்கள் பாலைவ னம் போன்ற சுடுமணல் நிரம் பிய, மறைப்புகள் இன்றிய வெறும் வெளிப்பிரதேசமா கும்.

இதனால் புலிப்போராளி கள் உருமறைப்பை மேற் கொள்ளாது இராணுவத்தின் துப்பாக்கி ரவைகளின்'புயலை ஊடறுத்து விமானப்படை யின் குண்டு 'மழையில்' நனைந்தே தமது தீவிர எதிர்ப்பை சளையாது காட் டிவருவதாக கூறும் அவர், இதனாலேயே போராளிகள் பலர் காய மடையவும் வீர மரணம் அடையவும் வேண்டி யிருப்பதாக சுட்டிக்காட்டு கிறார். காயமடையும் போ

— 4 ஆம் பக்கம் பார்க்க

**ஆனையிறவு**

**வரலாற்றுத் தொடர்**

**நாளை வரும்**

## வாழப்பாடிராமமூர்த்தி இராஜினாமா!

இந்திய மத்திய தொழிற் துறை அமைச்சர் வாழப் பாடி ராமமூர்த்தி தமது அமைச்சர் பதவியை இரா ஜினாமாச் செய்துள்ளார்.

இராஜினாமாவுக்கான கார ணம் உடனடியாக அறிவிக் கப்படாவிட்டாலும் காவிரி நீர் பங்கீடு தொடர்பாக மத் திய அரசுக்கும் தமிழக அர சுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையே தமிழகத் தைச் சேர்ந்த ராமமூர்த்தி இராஜினாமாச் செய்யக் கார ணம் எனக் கூறப்படுகிறத,

## பிக்குகளை ஆலோசனை கேட்கிறார் ஜனாதிபதி!

இனப்பிரச்சினைத் தீர் வுக்கு பௌத்த பிக்குகள் உதவிபுரிய வேண்டும் என அழைப்புவிடுத்துள்ளார் ஜனா திபதி பிரேமதாஸ.

பௌத்த மஹா சங்கத்தி னர் கலந்து கொண்ட மத நிகழ்ச்சியில் நேற்று உரை யாற்றிய அவர் இனப்பிரச் சினைத் தீர்வுக்கு பௌத்த பிக்குகளின் ஆலோசனையை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட் டார்.

## ஹேரத் - நரசிம்மராவ் புதுடில்லியில் சந்திப்பு

புதுடில்லி சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் நேற்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் பேச்சு நடாத்தினார்.

இச்சந்திப்புகளின் போது ஜனாதிபதியின் கடிதம் ஒன் றையும் ஹேரத் பிரதமர் நர சிம்மராவிடம் கையளித்தார்.

## புதிய இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தம்

இலங்கையும் இந்தியாவும் நேற்று கூட்டு வர்த்தக ஒப்பந் தம் ஒன்றில் கைச்சாத்திட் டுள்ளன

ஒப்பந்தத்தில் அமைச்சர்கள் ஹரல்ட் ஹேரத்தும் மாத வசிங்சோலங்கியும் கைச்சாத் திட்டுள்ளனர். இவ்வர்த்தக ஒப்பந்தத்தில் பொருளாதா ரம் தொடர்பாகவும் கலா சாரம், கல்வி பரிவர்த்தனை தொடர்பாகவும் பிரேரணை கள் உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வன்னிப் பகுதிகளில் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், புதுக்குடியிருப்பு, மல்லாவி, விசுவமடு, ஒட்டு சுட்டான் பகுதி மக்கள், ஊர டங்குச் சட்டம் தொடர்ந் தும் அமுலில் உள்ளதால் உணவு இன்றி பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இம் மாவட்டத்திற்கு தரை மார்க்கமாக உணவுப்பொருள் களை எடுத்துவர முயற் சித்தபோதும் ஊரடங்குச் சட்டத்தால் வவுனியாவுக்கு அப்பால் வடக்கு நோக்கி வாகனங்கள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மதியஉணவு முத்திரைகளை பரிசீலிக்கும் பரிசோதகர்களுக்கு படி

பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைக ளைப் பரிசீலிக்கும் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு ஒரு உணவு முத்திரைக்கு 15 சதம் வீதம்மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களே வழங்க வேண் டுமென கூட்டுறவுத் திணைக் களம் பணித்துள்ளது. (ப- 10)

## கவசவாகனமும் சேதம்

நேற்று முன்தினம் அம் பாறை கஞ்சிக்குடிச்சாறுபகுதி யில் விசேட அதிரடிப்படை மீது நடாத்தப்பட்ட தாக்கு தலில் கவசவாகனம்முற்றாகச்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பு நாற்றமெடுக்கிறது சுத்தமாக்கப் பல மில்லியன்

கொழும்பில் நாளாந்தம் சேரும் குப்பை கொழும்பு மாநகர சபைக்குப் பெரும் சுமையாக உள்ளதாம்

கொழும்பு மாநகரில் நாளாந்தம் 800 தொன் குப்பை சேகரமாகிறது கொழும்பு மாநகரில் தற்பொழுது 7 லட்சம் குடியிருப்பாளர்கள் வசிக்கிறார்கள். நாளாந்தம் மூன்றரை லட்சம் பேர் புற நகர்ப் பகுதிகளில் இருந்து அங்கு வந்து செல்கிறார்கள்.

இக் குப்பைகளை அகற்றும் பணியில் நாளாந்தம் 2,500 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். இந்தக் குப்பை அகற்றும் பணிக்காக அரசு வருடாந்தம் 84 மில்லியன் ரூபாவைச் செலவழித்து வருகின்றது.

# விமானப்படைத்தளத்தாக்குதல்; ஆகஸ்ட் 26 இல் விசாரணை

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சி விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆகஸ்ட் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த வழக்கில் காமினி திசநாயக்கா, பிலிப் அன்ரனி பெர்ணாண்டோ. எல்.ஏ. பி. சில்வா, வி. ஆர். பிரேமச்சந்திரா, டபிள்யூமெண்டிஸ், எச். டயஸ் அனில்ஜெயவர்த்தனா, சி. எல் பெர்ணாண்டோ ஹெட்டியாராச்சி கே. விஜய் எச்டொன் நிக்கல்ஸ் ஆகிய 11 பேரும் எதிரிகளாவர்.

19. 4. 88க்கும் 22. 5.88க்கும் இடைப்பட்ட காலத்தில் தாக்குதல் நடத்த சதி செய்தமை 22. 4. 88 இல் தாக்குதலை நடாத்தி ஆயுதங்களை அபகரித்தமை போன்றகுற்றச்சாட்டுகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (38)

# தொழில்நுட்ப பயிலுநர்களுக்கு நாளாந்தம் 25ரூபா படி!

யாழ் கல்வித்திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் அமைய, தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் தொழில்நுட்பக் கல்லூரிப் பயிலுநர்களுக்கு அவர்கள் கடமையாற்றும் நாள் ஒன்றுக்கு 25 ரூபா சம்பளம் வழங்க யாழ் கல்வித்திணைக்களம் முடிவு செய்துள்ளது. (78)

# அதிபர் தரம் மூன்றுக்கு தெரிவானோர்பட்டியல்வெளியானது

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தரம் IIIற்குரிய போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் தரம் III ற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் யாழ் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 28 பேரின் பெயர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. (74)

# ✶ களத்தில் காலிழந்த பெண்போராளி சொல்கிறார்
# அரசு பணம் கொடுத்து ஆயுதம் வாங்குகிறது
# நாம்உயிரைகொடுத்து அதனைபறிக்கிறோம்

'ஸ்ரீலங்கா அரசு வெளிநாடுகளிடம் பணத்தைக் கொடுத்து நவீன ஆயுதங்களை வாங்கிஅதனை இராணுவத்துக்கு வழங்குகின்றது. நாம் களத்தில் எமது உயிரைக் கொத்து அந்த ஆயுதங்களை இராணுவத்திடமிருந்து பறித் தெடுத்துப் போராடுகின்றோம்.'

இவ்வாறு ஆனையிறவு மோதலில் காலிழந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பெண்போராளி எமது நிருபரிடம் தெரிவித்தார்.

14 வயதேயுடையஅப்போராளி தொடர்ந்து சொல்கையில், 'காலை இழந்தாலும் நாம் வீடு செல்லப் போவதில்லை. செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு மீண்டும் களம் சென்று எதிரியுடன் போராடுவோம்' எனக் குறிப்பிட்டார். (39)

# உலக வங்கி உதவியுடன் தெற்கு வீதிகள் புனரமைப்பு

உலகவங்கியின் உதவியுடன் தெற்கில் மூன்றாவது வீதி அபிவிருத்தித் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திகீழ் 24 பாலங்கள் உட்பட 400 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படும்.

இதன் மூதலாம் கட்டத்தில் மொறட்டுவைக்கும் காலிக்கும் இடைப்பட்ட 100 கிலோமீற்றர் நீளப் பாதை புனரமைக்கப்படும்,

அடுத்தவருட ஆரம்பத்திற்கிடையில் பூர்த்தியாகத் திட்டமிடப்பட்டுள்ள இவ் வீதிப்புனரமைப்புக்கு 72 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

# கல்வி நிருவாக அதிகாரிகளின் பதவிப் பெயர்களில் மாற்றம்

இலங்கைக் கல்வி நிருவாகச் சேவை அதிகாரிகளின் பதவிப் பெயர்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள் இனிமேல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் என அழைக்கப்படுவர்.

கல்வி நிருவாகச் சேவையின் மூன்றாம் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் என அழைக்கப்படுவர்.

இது பற்றிய சுற்று நிருபங்களைக் கல்வி அமைச்சு தயாரித்துள்ளது. (74)

# வளைகுடாவில் பாதிப்புற்றோருக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஐ நா தொழிற் பிரிவு ஈடுபட்டுள்ளது.

இவர்களுக்கான நஷ்டஈடு பற்றி ஆராய ஐ. நா. குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

வளைகுடா யுத்தத்தினால் 73 ஆயிரம் இலங்கைத்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நஷ்ட ஈட்டுக்கான விண்ணப்பங்கள் இலங்கை வெளிநாட்டுப் பணியகத்தினால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்டிருந்தன.

அந்த விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே தொழில் இழந்தோருக்கு நஷ்ட ஈட்டை ஐ.நா.சபைவழங்கவுள்ளது 74

# மாணவர் உதவி

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி பொறியியல் மாணவர் மன்றத்தினர் எதிர் வரும் 31ஆம் திகதி மாலை 3 00 மணிக்கு அவசரகால முதலுதவிப் பயிற்சிநெறி ஒன்றினைக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தவுள்ளனர்.

செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களில் இம் மன்றத்தில் 25 மாணவர்களும், 20 மாணவிகளும் காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் சேவையிலும் இரத்ததானம் வழங்குவதிலும் ஈடுபடுவர் 10

# மலேரியா தடுப்பு உதவியாளர் இல்லை

வன்னி மாவட்டத்தில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் மலேரியாத் தடுப்பு இயக்க வெளிக்கள உதவியாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதனால் கிராமப்புறங்களில் உள்ள வைத்தியசாலைகளில் காய்ச்சல் நோய் பீடித்து சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு மலேரியா நோய் பீடித்துள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க இரத்தம் எடுத்துப் பரிசோதிக்கும் முன்னைய நடைமுறை பாதிப்படைந்துள்ளது. (38)

# ஊழியர் சேமலாபநிதி காசோலையில் பெரும் மோசடி

வேலணைப் பிரதேச சபையில் இருந்து கொழும்பில் உள்ள ஊழியர் சேமலாப நிதி அத்தியட்சகருக்குக் காசோலை மூலம் அனுப்பப்பட்ட எழுபத்து ஏழாயிரத்து இருநூற்று ஆறு ரூபா எழுபத்துஐந்து சதம் மோசடி செய்து மாற்றி எடுக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

மேற்படி பணத்திற்கான இரண்டு காசோலைகள் மோசடிக் கும்பல் ஒன்றினால் எழுத்துக்கள் அழிக்கப்பட்டு மாற்றி எடுக்கப் பட்டுள்ளதாம்.

இந்த மோசடி சம்பந்தமாகத் திருகோணமலையில் உள்ள வடக்கு கிழக்கு மாகாண அரசின் உள்ளுராட்சி ஆணையாளருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை வங்கி முகாமையாளருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது. (19

# தொடரும் கடும் வரட்சியினால் கிணறுகளில் நீர் வற்றுகிறது

வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள கிணறுகளில் தற்போதைய வரட்சியினால் நீர் வற்றி வருகின்றது.

சங்கானை, பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்ச வயல் கிணறுகளில் தண்ணீர் போதுமானதாக இல்லை என்றும், நீர் விரைவாக வற்றி வருவதாகவும் தெரிவித்தனர் (13)


## நாதஸ்வர - தவில் நாதோபாசனை

இன்று (30-07-1991) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு

அருள்மிகு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில்

தவில் மேதை அமரர் சின்னராசாவின் புதல்வர்கள்

'ரவி'யும் 'சுதா'வும்

தம் தந்தைக்கு அஞ்சலியாகச் செய்யும்

நாதோபாசனை

இசை ஆர்வலர்கள் வருக! இளங்கலைஞர்களுக்கு ஆசிதருக!

07114


# முத்திரையிடல் தொடர்கிறது

தற்போது மல்லாகத்தில் இயங்கிவரும் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இப் பிரதேச எல்லைக்குள் இருக்கும் வியாபார நிலையங்கள் மற்றும் சந்தை வியாபாரிகளின் தராசு படிகள் போன்ற அளக்கும் கருவிகளுக்கு 1991 ஆம் ஆண்டுக்கான முத்திரை இடும் பணிகள் நடைபெறுகின்றன. (ப 10)

# வேங்கைகளுக்கு நேற்றும் அஞ்சலி

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலில் களப்பலியான லெப் கேணல் சரா, மேஜர் குகதாஸ் மற்றும் வீர வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இருநெல்வேலி, கல்வியங்காட்டுப் பகுதி வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன. வீதி எங்கும் தோரணங்கள் காணப்பட்டன. (74)

# உடைக்கு மட்டுமல்ல உடலுக்கும் 'ஸிப்' உள்ளே அவதானிக்கப் புதிய முறை

ஆரம்பத்தில் கைப்பைகளை சுலபமாகத் திறந்துமூடுவதற்காக அதில் ''ஸிப்'' வைத்துத் தைத்தார்கள். அதன் பின் ஆண் பெண் இரு பாலாரும் தமது ஆடைகளில் ''ஸிப்'' வைத்துத் தைத்தார்கள்.

ஆனால் மேல்நாடுகளில் இந்த 'ஸிப்' விடயம் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வளர்ந்து விட்டது. அங்கு உடம்பிலேயே இப்போது 'ஸிப்' வைத்து தைத்து தேவைப்படும் போது திறந்து உட்பகுதி அவயவங்களைப் பழுது பார்க்கிறார்கள்.

ஒருவருக்கு வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்தால், அந்த இடத்தில் சில சமயம் மீண்டும் அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டி வரும் என்று மருத்துவர் கருதினால், காற்றுப்புகாமலும், நீர் உட் செல்லாமலும் விசேட விதமாக தயாரிக்கப்பட்ட 'ஸிப்' பை அந்த இடத்தில் ஒட்ட வைத்து விடுகிறார்கள்.

இவ்விதம் 'ஸிப்' வைக்கும் முறை புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும், பலவீனம் ஆன நோயாளிகட்கும் ஒரு பெரும் வரப்பிரசாதம் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். (16)


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

## திட்டமிடல் அதிகாரி

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையோர் 12. 08 91 முன் விண்ணப்பிக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 17. 08 91 (9. 00 மணிக்கு) இப் பணிமனையில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர்ப் பட்டியல் பணிமனை விளம்பரப் பலகையில்15. 8.91-ல் வெளியிடப்படும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப் படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
27. 07. 91.

ச.சிவானந்தராசா
கௌரவ செயலாளர்,
இலங்கைச் செ. சி. சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

07115

சுண்டுக்குளி கிள நூலகம்



## கரையை நோக்கி கடும் தாக்குதல்

சுழிபுரம் மேற்கு மாதகல் கடற் பிராந்தியத்தில் ரோந்து சுற்றிவரும் ஸ்ரீலங்கா கடற்படையினரின் அதிவேக விசைப்படகுகள் கரைப் பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்களை அடிக்கடி மேற்கொண்டு வருகின்றன.

இதனால் கடற்கரைக்குக் கிட்டவாக மீன்பிடித்து வந்த மீனவர்கள் அச்சமடைந்து மீன்பிடிக்கச் செல்வதை நிறுத்தியுள்ளனர்.

பண்டத்தரிப்புச் சந்தையில் இதன் காரணமாக மீனுக்குப் பலத்த தட்டுப்பாடும், விலை ஏற்றமும் ஏற்பட்டுள்ளது. (13)

## மட்டு மாவட்டத்தில் ஆய்வுகூடங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தலா 84 ஆயிரம் ரூபா பெறுமதியான இருபத்தைந்து மினி ஆய்வு கூடங்கள் அமைக்க அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## மடு முகாமில் கல்வி வசதி

மன்னார் மடு முகாமில் உள்ள அகதி மாணவர்களுக்கு முகாமிலேயே கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்த ஆசிரியர்களே கல்வி கற்பித்து வருகின்றனர். (38)

## மாணவர்க்கு உபகரண உதவி

வலி - வடக்கு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு உதவுமாறு யாழ் அரசாங்க அதிபர் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிவாரண இணைப்பாளரிடம் கேட்டுள்ளார்.

இம்மாணவர்களில் ஒரு பகுதியினருக்கு உடுதுணிகள், கொப்பிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி உதவுமாறு 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்திடம் யாழ் அரசாங்க அதிபர் கடித மூலம் கோரியுள்ளார். (ப-10)

## ராஜீவ்கொலை விசாரணைக்குழு அதிகாரிகள் மீது
# இந்திய அரசு சந்தேகம்!

ராஜீவ்காந்தி கொலை தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுக்குழு மீது இந்திய மத்திய புலனாய்வுத்துறை நம்பிக்கையிழந்துள்ளதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் எதிரொலியாக இக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் இரகசிய காப்பு சத்தியப் பிரமாணம் செய்யுமாறு மத்திய அரசினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் இடம் பெற்றுள்ள புலனாய்வுத் துறை அதிகாரிகளின் தெரிவு குறித்து இந்தியப்பத்திரிகைகள் ஆரம்பத்திலேயே அதிருப்தி தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இணைப்பைப் பிரிக்கும் காவிரி நீர்
## அ. தி. மு. க - காங்கிரஸ் உறவில் பெரும் விரிசல்!

காவிரி நீர்ப்பங்கீடு தொடர்பாக எழுந்துள்ள கருத்து வேறுபாட்டினால் அ. தி. மு. க. - இந்திராகாங்கிரஸ் உறவில் பெரும் விரிசல் தோன்றும் நிலை உருவாகியுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரத்தை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மத்திய அரசு விட்டமைக்கு தமிழகத்தைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர்களான பா. சிதம்பரம், எம் அருணாசலம் ஆகியோரே காரணமென தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழக மக்களின் நலனுக்கு இவ்விருவரும் விரோதமாக நடந்துள்ளதனால் தமிழ் நாட்டில் இவ்விரு இணை அமைச்சர்களும் கலந்துகொள்ளும் எந்தவொரு வைபவத்திலும் அ. தி. மு. க. எம்.எல் - ஏக்களோ, எம். பிக்களோ கலந்து கொள்ளக்கூடாதெனவும் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்

காவிரிநீர்ப்பிரச்சினை தமிழகத்துக்கு சார்பாகத் தீர்க்கப்படாவிட்டால் தமது பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக 11 அ. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

போதிய பெரும்பான்மையற்று ஆட்சிப் பீடத்திலிருக்கும் மத்திய அரசுக்கு அதன் தோழமைக்கட்சியான அ. தி. மு. க. வுடனான உறவில் ஏற்படும் இத்திடீர் விரிசல் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம்!
## கட்டாயப்படுத்திகல்விஅமைச்சு புதியசுற்றறிக்கை

தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்படுதல் கட்டாயம் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக புதிய சுற்றறிக்கையொன்றையும் கல்வி அமைச்சு தற்பொழுது பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பிறமொழியறிவை மாணவர்களுக்கு வளர்க்க இச்சுற்றறிக்கையைக் கண்டிப்பாக அமுல் செய்யுமாறும் கல்வி அமைச்சு பணித்துள்ளது.

## ஆசிவேண்டி ஆராதனைகள்

வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள ஆலயங்கள் பலவற்றில் வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும், களத்தில் நின்று வீரமுடன் போராடி வரும் வேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் விசேட பூஜைகள், அபிடேகங்கள் ஆகியன பரவலாக நடைபெற்று வருகின்றன.

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் ஆலயம், பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயம், மாதகல் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணியசுவாமி ஆலயம் ஆகியன உட்பட பல்வேறு ஆலயங்களிலும் இந்த வழிபாடு நடைபெற்றது. (13)

## 2 ஆம் தவணை விடுமுறை

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் இரண்டாந் தவணை விடுமுறைக்காக ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்படும்.

முடிவுறாத இரண்டாந் தவணைப் பரீட்சைகள் யாவும் மூன்றாந் தவணை ஆரம்பத்தில் நடைபெறும்.

இழந்த பாடசாலை நாட்களை ஈடுசெய்யும் வகையில் மூன்றாந் தவணையில் பதில் பாடசாலை நாட்களை, கோட்டக் கல்வி அதிகாரியின் முன் அனுமதியுடன், நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யும்படி அதிபர்கள் கேட்கப்படுகின்றனர் எனவும் யாழ்ப்பாணம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்கள். (74)

## சைவசமய அறிவுப்போட்டி

சங்கானை மேற்கு சனசமூக நிலையம் வடலியடைப்புப் புறாதனை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சைவ சமய அறிவுப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

வடலியடைப்புக் கிராமத்தில் வசிக்கும் பாடசாலை மாணவ, மாணவிகள் இப் போட்டியில் பங்குபற்றலாம் என்றும், இப் போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (13)

## 800 சிப்பாய்களை மீட்க
# 8000 துருப்புக்கள் யுத்தம்!

ஆனையிறவில் சிக்கிப்போயுள்ள 800 ஸ்ரீலங்கா சிப்பாய்களை விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்பதற்கு அரசு 8000 துருப்புக்களைக் கொண்ட பல படையணிகளை ஆனையிறவுப் போரில் ஈடுபடுத்தியுள்ளதாக அகில இந்திய வானொலி நேற்று நண்பகல் அறிவித்தது

கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை மேற்கோள் காட்டி இத் தகவலை இவ் வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் மட்டும் ஆனையிறவில் 42 சிப்பாய்கள் படுகாயமுற்றதாகவும் அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

## முகாம்களில்தமிழ்இளைஞர்கள்; சுவிசிலும் வேலை இல்லை!

சுவிற்சலாந்து (சுவிஸ்) நாட்டுக்குச் சென்ற ஈழத்தமிழ் இளைஞர்களுக்கு தற்போது வேலைவாய்ப்புக் கிடைப்பது மிகவும் கஷ்டமாகவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் யாழ் மாவட்டத்திலிருந்து சென்ற பலருக்கு இன்னும் வேலை எதுவும் கிடைக்கவில்லை என்றும், அகதிகளுக்கான முகாம்களிலேயே தொடர்ந்து வசித்து வருவதாகவும் அவர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு எழுதிய கடிதங்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. (13)

## டாக்டர்களுக்குத் தட்டுப்பாடு!
## இருவரே இரவுபகல் சேவை

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன் பொது ஸ்தாபனங்களால் நியமிக்கப்பட்ட இரு டாக்டர்கள் மேற்படிப்புக்காக கொழும்பு சென்றுள்ளதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

தற்போது கடமையாற்றும் இரு வைத்தியர்களே முழுநேரமாக நோயாளிகளை கண்காணிக்க வேண்டிய நிலை அங்கு உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-6)

## புலோலியில் சிறுவர் பாடசாலை

புலோலி மேற்கு பூவையூர் கிராமத்தில் விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் சிறுவர் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்துள்ளனர்.

வீரவேங்கை ரதீஸின் பெற்றோர் இப் பாலர் பாடசாலையைத் திறந்து வைத்தனர். (38)

## பட்டம்பெறாத ஆசிரியர்கள் சான்றிதழ் பெற உதவி

இலங்கையில் உள்ளபாடசாலைகளில் கற்பித்தல் தொழிலை மேற்கொண்டிருக்கும் ஆசிரியர்களில் பட்டச் சான்றிதழ்களைப் பெறாத ஆசிரியர்களுக்குப் பட்டம் பெறுவதற்கானகல்விவசதிகளைச்செய்து கொடுப்பதற்கு கல்வி உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சகல பிராந்திய கல்விப்பணிப்பாளர்களுக்கும், கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

## வடமராட்சி கிழக்கில் மேலும்
## 3 புதிய கிராம சேவகர் பிரிவுகள்

வடமராட்சி கிழக்கில் மேலும் மூன்று புதிய கிராம சேவகர் பிரிவுகள் தோற்றுவிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதன்படி வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை பதினெட்டில் இருந்து இருபத்தியொன்றாகஅதிகரிக்கின்றது.

தாளையடி என்னும் ஒரு புதிய கிராமசேவகர் பிரிவும், குடாரப்பு என்னும் புதிய கிராமசேவகர் பிரிவும் தற்போதைய உடுத்துறை கிராமசேவகர் பிரிவின் ஒரு பகுதியும் புதிய கிராம சேவகர் பிரிவுகளாக உருவாக்கப்பட உள்ளன.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (43)

## களஞ்சியங்கள் காலி!
## கிளிநொச்சியில்உணவுப்பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

7-ம் கட்ட இலவச உலர் உணவுகள் வறிய மக்களுக்கு மட்டுமே வழங்க ஆரம்பித்த போதிலும் அது முழுமையாக வழங்கப்படவில்லை எனக்கூட்டுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன

களஞ்சியத்தில் போதியளவு உணவுக்கையிருப்பு இல்லாதிருப்பதாகவும் இதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ப-6)

## கடற்படைத் தாக்குதலினால்
## மருதங்கேணிஆஸ்பத்திரி மூடப்பட்டது

ஆனையிறவு முகாம் தாக்குதல் கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை தற்காலிகமாக கடந்த வாரம் மூடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி, மருந்துக் கலவையாளர், சிற்றூழியர்கள் அனைவரும் வரணி, அம்பன், மத்திய மருந்தகங்களுக்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் பிரசவ விடுதியும் பரிசோதனைகள் வாட்வசதிகள்கொண்டவைத்தியசாலையாக இருந்தது. இது தற்காலிகமாக மூடப்பட்டதினால்இப்பகுதியில்நிரந்தர இடம்பெயர்ந்தகுடும்பங்களின் கர்ப்பிணித்தாய்மார்குழந்தைகள், நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. கடற்படைப் பீரங்கித் தாக்குதலின் போது கடந்த வாரம் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் பின்பகுதி சேதமடைந்துள்ளது. (18)

யாழ் மாநகரசபை

## கட்டாக்காலிப் பன்றிகளை பிடிக்க நடவடிக்கை

யாழ் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் பன்றிகளைப் பிடிக்க மாநகர சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பன்றி வளர்ப்போருக்கு கட்டி வளர்க்குமாறு பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் அவை வீதிகளில் கட்டாக்காலியாகத் திரிந்து சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிப்பதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து இப் பன்றிகளைப் பிடிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் கூறின. (74)

## வெளியூர்த் தபால்கள் இன்று முதல் விநியோகம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு கப்பலில் வந்த வெளியூர்த் தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன

யாழ் பிரதம தபாலகத்துக்குரிய தபால் பொதிகள் இன்றுமுதல் தரம் பிரிக்கப்பட்டு வழமைபோல் விநியோக சேவைகள் நடைபெறுமென்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏனைய குடா நாட்டுக்கான உள்ளூர், வெளியூர்த் தபால் பொதிகள் வழமை போல் அனுப்பிவைக்கப்படுமென்றும் அவ் அதிகாரி தெரிவித்தார். 33

## யாழ் ஆஸ்பத்திரியில் பலர் இரத்ததானம்

யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் உயர்தர வகுப்பு மாணவ மாணவிகள் இரத்த தானம் செய்வதற்கு ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் வந்திருந்தனர்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி, மத்தியகல்லூரி, பரியோவான் கல்லூரி மாணவ மாணவிகளே இரத்ததானம் செய்துள்ளனர். பொதுமக்கள் பலரும் நேற்று முன்வந்து இரத்ததானம் செய்தது குறிப்பிடத்தக்கது.

நேற்று மட்டும் நூற்றுக்கு மேற்பட்டோர் போர்க்கால நிலைமைகருதி இரத்ததானம் செய்துள்ளனர். மேலும் பலர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தனர். 79. 33

## சந்தேகநபர் பலியாம்

நேற்று முன்தினம் கோயம் புத்தூரில் பொலிஸாரால் கைது செய்யப்படும் போது குண்டைவெடிக்க வைத்து பலியான இருவரில் ஒருவர் சந்தேகநபர் சிவராஜனின் நண்பன் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிக்ஸன் என அழைக்கப்படும் இவரையும் தாம் ராஜீவ் கொலை தொடர்பாக தேடி வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கரவெட்டியில் அஞ்சலி

கட்டைக்காட்டில் நேற்று நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த சூரியகலா (குமுதினி - நடராசா) கரவெட்டி வடக்கு வீரவேங்கையின் புகழுடம்பு நேற்று மூத்த விநாயகர் பொன்னம்மாள் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் வீரவேங்கைக்கு அஞ்சலி செலுத்தினர். அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து இவரது புகழுடல் இராணுவ மரியாதைகளுடன் நவிண்டிலில் உள்ள மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. 38

## முல்லை அரச பலவெற்றிடங்கள் செயலகத்தில் நிரப்பப்படவில்லை

முல்லைத்தீவு செயலகத்தில் உயர் அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் கடந்த பலமாதங்களாக நிரப்பப்படாமல் காலியாகவேதொடர்ந்தும் இருந்து வருகிறது

இச்செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் பதவி, சமநலச் சேவை உதவி ஆணையாளர் பதவி மற்றும் அலுவலகங்களில்எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர்களுக்கு நீண்ட பலமாதங்களாக வெற்றிடங்கள் நிரம்பப்படாமல் இருந்து வருகின்றன.

மேலும் இம்மாவட்டத்தில் சுமார் இருபத்தைந்து கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கும் வெற்றிடங்கள் இருந்து வரும் வேளை இப்பகுதியில் உள்ள உத்தியோகத்தர்கள் கிழக்குதெற்கு மற்றும் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (38)

அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சாவகச்சேரி

### மஹோற்சவ விழா

அன்புடையீர்!

நாளை கொடியேற்றம்- 31-07-91 புதன் காலை 7 மணி முதல் 11 மணிக்குள், சித்திரத் தேர்- 08-08-91 வியாழன் காலை 7 மணி முதல் 11 மணிக்குள், தீர்த்தத் திருவிழா- 09-08-91 வெள்ளி காலை 7 மணி முதல் 10 மணிக்குள், ஆடிப்பூர விழா (108) தீப பூஜை- 12-08-91 திங்கள் பி. ப. 3 மணிக்கு.

இம் மஹோற்சவ விழா 10 நாட்கள் நடைபெறும்
இக் காலங்களில் அனைவரும் வருக
அன்னை அருள் பெறுக.

இங்ஙனம்
ப. மகாகணபதி சர்மா
(ஆலய தர்மகர்த்தா)

இவ்விழா சிறப்பாக நடைபெற
அன்னையைப் பிரார்த்திக்கிறோம்
செல்வம் கூல்பார்
இல 7, நவீன சந்தை,
சாவகச்சேரி. 07113

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 30.07.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஊரடங்குச் சட்டத்தால் பொருள்களை இறக்கமுடியாது

# பருத்தித்துறை வந்த கப்பல்கள் காங்கேசன்துறைக்கு சென்றன

யாழ் மாவட்டத்திற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு வந்த குமண, வில்லிலில்லி ஆகிய இரு கப்பல்களும் ஊரடங்குச் சட்டம் அமுலானதால் காங்கேசன்துறைக்கு அனுப்பட்டுள்ளன.

இக்கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கிக் கொண்டிருந்தபோது ஊரடங்கு அறிவிப்பு வந்ததில் அவை அரைகுறையாகப் பொருள்களை இறக்கிய பின்னர் காங்கேசன்துறைக்குச் சென்றுள்ளன.

கடந்த இரு வாரங்களாக ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் யாழ் குடாநாட்டின் உணவு நிலைமைகுறித்து அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்புகொண்டதால் இக்கப்பல்கள் இங்கு அனுப்பிவைக்கப்பட்டன.

முன்னர் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தபோதும்பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் விசேட அனுமதியுடன் பொருள்கள் இறக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றுமுன்தினம் காலை இலங்கை வானொலிச் செய்தியில் யாழ் குடா நாட்டில் உணவுப் பஞ்சம் இல்லை போதியளவு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (38)

## இளவாலையில் வேங்கைகளுக்கு அஞ்சலி

நேற்று முன்தினம் ஆனையிறவில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த பதினொரு போராளிகளுக்கு இளவாலைப்பகுதியில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இவர்களின் புகழுடல்கள் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அஞ்சலி உரையைத்தொடர்ந்து கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

வீரமரணமடைந்த போராளிகளின் பெயர் விவரம் வருமாறு:

சசி (மாணிக்கராஜா சிவகுமார் - திருமலை), காட்மன் (கோணலிங்கம் சுரேஷ்வரன் - திருமலை), வாணன்(நடேசு ஜெயக்குமார் - உரும்பராய், துரை (சிங்கராஜா மனோகர் - தம்பலகாமம்), மாலாணன் (விஜயதாஸ் விஜயபாலன் - திருமலை), தமிழ்ச்செல்வன் (மாசிலாமணி நிரஞ்சன் - திருமலை), ஆதவன் சிவலிங்கம் சிவநாதன் - திருநகர்), முரளி (எட்வின்சிறி - மட்டுநகர்), நரேஷ் (எட்வேட் குணசூரியன்-பண்டத்தரிப்பு), சந்திரன் (மூருகேசு ராஜேஸ் கண்ணன்), அனுஷா (ஜெகுந்தா குமாரசாமி - ஏழாலை).

## முல்லைத்தீவிலும் மாவீரருக்கு அஞ்சலி

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆனையிறவு களத்தில் பலியான வீரவேங்கைகளுக்கு கிராமங்கள் தோறும் அஞ்சலிகள் செலுத்தப்பட்டு வருகின்றன.

துணுக்காய், மல்லாவி, மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பகுதிகளைச் சார்ந்த களத்தில் பலியான வீரவேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர். 38

## உணவுப் பொருள் லொறிகளில் வந்தன

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து இறக்கப்பட்ட உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட லொறிகள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்தன.

திடீரென ஊரடங்குச் சட்டம் அமுலானதால் பருத்தித்துறையில் இறக்கிய பொருள்களை ஏற்றிக்கொண்டு இவை வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்றுள்ளதாக மேலும் தெரிவிக்க படுகிறது (33)

## எழுவைதீவில் டாக்டர் இல்லை

எழுவை தீவில் ஆயுள் வேத டாக்டர் இல்லாமல் அங்கு வாழும் மக்கள் மருத்துவ வசதி இன்றி அவஸ்தைப்படுவதாக அங்கிருந்து வந்தவர்கள் மூலம் தெரியவந்துள்ளது.

போதிய மருத்துவ வசதியின்மையால் கடும் நோயாளர்களுக்கு உயிரிழப்பு ஏற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 74

வடம. கிழக்கு ப. நோ. கூ. சங்கம்

## லொறி அடிக்கடி பழுது விநியோகம் பாதிப்பு

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான லொறி அடிக்கடி பழுதடைவதனால் சங்கம் பல்வேறு கஷ்டங்களுக்குஉள்ளாவதாகத்தெரிய வருகின்றது.

தற்போதைய போர்க்கால சூழ்நிலைமைகளில்கிளைக்குப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு லொறி இல்லாமையினால் நிர்வாகத்தினர் பெரும் சிரமப்படுவதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி சங்கத்திற்கு ஒரே ஒருலொறி மாத்திரமேஉண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. (43)

### புதிய ..

கைச்சாத்தாகி நான்கு வருடம் பூர்த்தியானதினத்திலேயே இப்புதிய இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கவச வாகனமும்...

சேதமடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் 8 அதிரடிப்படையினர் பலியானமை தெரிந்ததே.

### வன்னி ..

ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இம் மாவட்டத்தில் ஊரடங்கு அமுல்படுத்த முன்னர் இருபத்தியிரண்டு லொறிகளில் உணவுப்பொருள்கள் எடுத்து வரப்பட்டன.

மேலும் இருபத்தியிரண்டு லொறிகளில் உணவுப் பொருள்களை எடுத்து வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுல் செய்யப்பட்டதனால் உணவுப் பொருள்களை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

### நடைபெற்றது ...

ராளி கூட ஆஸ்பத்திரியில் ஓரளவு சிகிச்சையை பெற்ற பின் மீண்டும் யுத்தகளம் வருகிறான் இங்கு மீண்டும் அவன் காயப்படுவதும் தவிர்க்க முடியாததாகிறது.

படுகாயம் வரையோ அல்லது வீரமரணமடையும் வரையோ இவ்வாறு மீண்டும் யுத்தகளம் நோக்கி ஓடும் இத்தகைய வீரத்தை எங்கும் காணமுடியாது என்கிறார் அவர்.

யுத்தமுனைக்கு வெளியே உள்ளவர்கள் எண்ணும் சூழலுக்கும் யுத்தமுனையில் உள்ள சூழலுக்கும் எவ்வளவோ வேறுபாடு உள்ளது என்பதை அங்கு போய் நேரில் அறிந்தாலே புரியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆதரவாளர் மரணம்

ஆனையிறவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் புலிகளின் தீவிர ஆதரவாளரான சுரேஷ்(நாவற்குழி) மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விருதுகளைபெற்றார்

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் சங்க ஆணையாளர் திரு. நாகேந்திரம் போஜனின் சிறந்த சாரணர் சேவையைப் பாராட்டி சாரணர் சேவைக்கான உயர் விருதான சேவைப் பதக்கத்தினை இலங்கைச் சாரணர் சங்கம் வழங்கிக் கௌரவித்தது.

இவர் சாரணர் தலைவர்களின் உயர் பயிற்சிக்கான பயிற்றுனர் தலைவர் நியமனச் சான்றிதழையும் அண்மையில் பெற்றார். இதற்கான சர்வதேச பயிற்றுனர் தலைவர்க்கான பயிற்சியினை தைவானில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (12)